
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 11 மே - 1998 இதழ் - 5




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. பேசாதவனின் பிரசங்கம் 1
2. சுவிசேஷத்திற்கு கீழ்படிவது எப்படி 8
3. பெண்கள் பகுதி 13
4. II. தீமோ 2 : 1 -3 22
5. பேதுரு அப்போஸ்தலன் 25
6. யெரொபெயாம் 30

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 11 MAY-1998 Issue - 5

## ஆசிரியர் உரை

# "பேசாதவனின் பிரசங்கம்"

விசுவாச வீரர்களின் பட்டியலை ஏந்தி நிற்கும் எபிரேயர் நிருபம், ஏராளமான நீதிமான்களின் விசுவாச வாழ்க்கையை எடுத்துக் கொடுக்கிறது. இப்பட்டியலில் இடம் பெறாத, யோபு போன்ற வேறு சில தேவ மனிதர்களும் உண்டு. ஆனால், அவர்கள் எல்லோரைக் காட்டிலும் அல்லது அவர்கள் எல்லோருக்குள்ளும் ஒரே ஒருவனை வேதாகமம் வேறுபடுத்திக் காட்டுகிறது. இத்தனைக்கும், அவன் தனது வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசினதாக வேதாகமம் எங்கும் காணோம். கர்த்தருடனோ அல்லது தனது குடும்பத்தாருடனோ எதுவும் பேசினதாகக்கூட குறிப்பிடபடவில்லை. இவன் வாழ்வு பற்றி ஒரு சில வசனங்களே வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. (ஆதி.4 1-8)

ஆனாலும், இவன் எல்லோருக்குள்ளும் சிறந்தவன் என்று பரிசுத்த ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டுள்ளான். இவனைப்பற்றி எபிரேயர் ஆசிரியர் இவ்விதம் கூறுகிறார். **"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமான் என்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்"**. (எபி. 11 : 4).

எத்தனையோ நீதிமான்கள் வேதாகமத்தில் உண்டு. ஆபேலைப் பற்றிப் பேசிப் பிரசங்கிப்பது போலவே இவர்களைப் பற்றியும் நாம் பேசிப்

பிரசங்கிக்கிறோம். ஆனால் அவர்கள் அனைவருக்கும் ஆபேலுக்கும் அடிப்படையில் ஒரு வேறுபாடு உண்டு. அவர்கள் மரித்தபின் **"பேசப்படுகிறார்கள்"**. இவனோ மரித்த பின் **"பேசிக் கொண்டிருக்கிறான்"**. இது என் கருத்தல்ல. வேதாகமம் தெள்ளத் தெளிவாக இக்கருத்தை வலியுறுத்திக் கூறும் ஒனறு.

விசுவாசத்திற்காக வாழ்ந்து, விசுவாசத்திற்காக பாராட்டுப் பெற்று, விசுவாசத்திற்காக அங்கீகரிக்கப்பட்டு, விசுவாசத்திற்காக மரித்த முதல் மனிதனும் இவன் தான். குடும்பத்தில் பிறக்கும் தலைப்பிள்ளைக்கு பெற்றோரிடம் தனிச்சிறப்பு உள்ளது போல், விசுவாசக் குடும்பத்தில், முதன் முதலாகப் பிறந்த இவனுக்கு பரிசுத்த ஆவியானவர் தனியொரு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

சரி, இந்த சிறப்பான மனிதன் நமக்காக என்ன பேசுகிறான் என்று கவனிப்போம். இவன் பேசும் அனைத்தையும் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், நமக்குப் பிரயோஜனமாக இருக்கும் சிலவற்றை நாம் இங்கே கவனிப்போம்.

## I. "விசுவாசம்" பற்றி ஆபேலின் பிரசங்கம்

மரித்தும் பேசும் ஆபேல், நமக்குச் செய்யும் முதல் பிரசங்கம் விசுவாசம் பற்றியது. இதுபற்றிப் பேச விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் அனைவருக்குமே தகுதியிருந்தாலும், இவரின் தகுதி அலாதியானது. நான் ஏற்கனவே சொன்னது போல அத்தகுதியை இப்பூமியில் பெற்ற முதல் மனிதன் இவன். இவனுடைய விசுவாசத்திற்கு தேவனே சாட்சி பகர்ந்திருக்கிறார்.

ஆபேலின் விசுவாசம் வெளியாவதற்குக் காரணமாயிருந்தது இவனும், இவன் சகோதரனாகிய காயீனும் கொண்டு வந்த காணிக்கைகளே. இருவரும் காணிக்கை கொண்டு வந்ததை வசனம் இவ்வாறாகக் குறிப்பிடுகிறது. "**... காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான். ஆபேலும், தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார்.** (ஆதி. 4 : 3, 4). காயீனின் காணிக்கை ஏன் தள்ளப்பட்டது, ஆபேலின் காணிக்கை ஏன் அங்கீகரிக்கப்பட்டதென்பதற்கு ஆதியாகமத்தில் போதுமான விளக்கம் இல்லாவிட்டாலும், எபிரேயரில் அதற்கு அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளது.

ஆம், அங்கே உள்ள **"அர்த்தம் மிகுந்த"** வார்த்தை, **"விசுவாசத்தினாலே"** என்பது தான். தேவன் இருதயத்தைக் காணக் கூடியவர். ஒரு செயலின் முடிவை

அறியக் கூடியவர். மேலும், பட்சபாதமில்லாதவர் (ரோம. 2 : 11). ஆகவே, காரணமில்லாமல் அங்கீகரித்தலையும், நிராகரித்தலையும் செய்திருக்கமாட்டார். இருவருடைய செயலையும் தனது நீதியின்படியாக சீர்தூக்கிப் பார்த்தபடியால் தான், எபிரேய ஆசிரியரைக் கொண்டு, **"விசுவாசத்தினாலே"** என்ற வார்த்தையை வெளிப்படுத்தியுள்ளார்.

அப்படியானால், ஆபேல் எதை விசுவாசித்திருப்பான்? கொஞ்சம் சிந்தனைக்குத் தீனி போடுங்கள். எதை விசுவாசித்திருப்பான்? எந்தப் பிரசங்கமும் அந்த நாட்களில் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. எப்படி விசுவாசித்திருப்பான்? யோசியுங்கள். தேவன் வெளிப்படுத்தினவைகளை விசுவாசித்திருப்பான். ஆம், தனக்காகக் கொண்டு வரப்படும் காணிக்கை இப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்று தேவன் நிச்சயம் வெளிப்படுத்தியிருப்பார். சந்தேகம் வேண்டாம். தேவன் வெளிப்படுத்தினதை இவன் விசுவாசித்துள்ளான். தேவன் எதைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னாரோ, எப்படிக் கொண்டு வரவேண்டு மென்று சொன்னாரோ, எவ்வளவு கொண்டு வரவேண்டுமென்று சொன்னாரோ, எப்பொழுது கொண்டு வரவேண்டுமென்று சொன்னாரோ அப்படியே அவன் செய்துள்ளான். ஆகவே தான் அங்கீகாரம் இவனுக்குக் கிடைத்துள்ளது.

தேவனுடைய வெளிப்பாட்டின் மீது தனக்கிருந்த விசுவாசத்தை கிரியைகளோடு நடத்திக் காட்டினான். வெறும் விசுவாசத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் காணிக்கையைக் "கொண்டு வந்தான்" என்று வேதம் கூறுகிறது. அவன் விசுவாசம் கிரியைகளோடும் கீழ்படிதலோடும் இருந்துள்ளது. கிரியை இல்லாத விசுவாசம் செத்ததென்று யாக்கோபு ஆசிரியர் அடித்துக் கூறுகிறார். (யாக்.2:26). அப்படியே, காயீனுடைய விசுவாசம் செத்ததாகவே இருந்துள்ளது. தேவன் சொன்னதை விசுவாசித்துத் தான் காயீனும் காணிக்கை கொண்டு வந்துள்ளான். கிரியையும் ஓரளவு இருந்தே உள்ளது. ஆனால், கீழ்ப்படிதல் அங்கே மறைந்து போய்விட்டது. நிராகரிப்புக்கு இது தான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

தேவ அங்கீகரிப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகளே, நம்முடைய நிலை எப்படியுள்ளது? ஆபேலுடைய "விசுவாசப் பிரசங்கம்" நமக்கு விளங்குகிறதா? நம்முடைய விசுவாசம் கிரியைகளோடும், கீழ்ப்படிதலோடும் உள்ளதா? கொஞ்சம் தற்பரிசோதனை செய்து பார்ப்போம். யாரைப்போல நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம்? கைவிடப்பட்ட காயீனைப் போலவா அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆபேலைப் போலவா?

கீழ்ப்படிதலும், கிரியையும் இல்லாத விசுவாசத்தையும், காணிக்கையையும் கர்த்தர் ஏற்றுக் கொள்ளமாட்டார். பரிசுத்த ஆவியானவர் சாமுவேலைக்

கொண்டு கூறுவதைக் கவனியுங்கள். "... . கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்."(I சாமு. 15 : 22). கர்த்தருக்கு எது பிரியம் என்று தெரிகிறதா?

ஆகவே, ஆபேலைப் போல தேவ அங்கீகாரத்தைப் பெறும் அனைத்து முயற்சிகளையும் நாம் எடுப்போம். தேவனுடைய சித்தம், வெளிப்பாடு ஆகியவைகளுக்கு, அதாவது வேத வாக்கியங்களுக்கு நம்மை முழுமையாக ஒப்புக் கொடுப்போம். வேத வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் அனைத்து உப தேசங்களுக்கும் நம்மை முழுமையாகக் கீழ்ப்படுத்துவோம்.

## II. பாடுகள் பற்றி ஆபேலின் பிரசங்கம்

ஆபேல் நமக்காகச் செய்யும் அடுத்த பிரசங்கம் **"பாடுகள்"** பற்றியது. தேவனுடைய நாமத்திற்காகப் பாடு அனுபவித்த முதல் மனிதனும் இவன் தான். தன் உயிரை விடும் அளவுக்கு இவன் பாடு அனுபவித்துள்ளபடியால், பாடுகள் பற்றி பாடம் கற்றுக் கொடுக்க இவன் முற்றிலும் தகுதியானவனே.

இவனுக்கு நேர்ந்த நிலையைக் குறித்து வேதம் இவ்வாறாகச் சொல்கிறது. "காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாக எழும்பி, அவனைக் கொலை செய்தான்." (ஆதி. 4 : 8). காணிக்கை செலுத்தப்பட்ட நாளுக்கும், ஆபேல் கொலை செய்யப்பட்ட நாளுக்கும் இடையே எவ்வளவு காலம் இருந்ததென்று தெரியவில்லை. ஆனால், அந்த நாளிலேயே கொலை செய்யப் பட்டான் என்று வேதம் கூறவில்லை.

ஆகவே, கொலை செய்யும் அளவு மூர்க்கமடைந்திருந்த தனது சகோதரனின் கோபாவேசத்திற்கு உள்ளான நிலையில் சில நாட்களாவது இவன் கழித்திருக்க வேண்டும். அதாவது, தேவன் தனக்குக் கட்டளையிட்டிருந்தவற்றைச் செய்த தற்காக இவன் சரீரபாடுகளை அனுபவித்திருக்க வேண்டும். அதன் பிறகே இவன் கொலைக்கு ஆளாகியிருக்க வேண்டும். நான் கூறும் இக்கருத்துப்படி நடந்திருக்க வாய்ப் பில்லையென்று சொல்லமுடியாது.

எப்படியோ, மரித்தும் பேசும் இம்மாமனிதன் தேவ சித்தத்தை ஒருவன் நிறைவேற்றும்போது, அல்லது நிறைவேற்ற விரும்பும் போது பாடுகளும், துன்பங்களும் உண்டு என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார்.

வேதாகமத்தின் பிற பக்கங்களை நாம் புரட்டிப் பார்த்தாலும் இதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. யோசேப்பு, மோசே, தாவீது, எரேமியா, தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, அப்போஸ்தலன் பவுல், ஸ்தேவான் என்று அநேக தேவ மனிதர்களை நாம் ஆதாரமாகக் காட்ட முடியும். இவர்கள் ஒவ்வொருவரும் என்னென்ன பாடுகளைப் பட்டார்களென்று விபரமாய்ச் சொல்ல இது சமயம் அல்ல. இந்தப் பாடுகள் இவர்களோடு முடிந்து போகவில்லை. தொடர்ந்து நடக்குமென்றே வேதாகமம் கூறுகிறது. அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் இதை வெளிப்படுத்தியுள்ளார். "அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்க விரும்பும் யாவரும் துன்பப்படுவார்கள்" (II தீமோ 3 : 12) என்று.

ஆகவே, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற விரும்பும் நம்முடைய வாழ்க்கையிலும் பாடுகள் இருக்கவே செய்யும். நமக்குத் தான் இந்தப் பாடுகள் என்று நினைத்து, சோர்ந்து, விசுவாசத்தில் பின் வாங்கிப் போக வேண்டாம். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ரோஜா மலர் படுக்கையல்ல. அது கல்லும், முள்ளும் நிறைந்த காட்டுப் பாதை. இந்த உண்மை தெரியாமல் கிறிஸ்தவத்தை அநேகர் ஏற்றுக் கொள்வதினால் தான் பின்வாங்கிப் போய்விடுகின்றனர்.

சந்தோஷமும், சமாதானமும், நித்திய ஜீவனும் கிறிஸ்தவத்திலே இருக்கிறதென்று வாக்குக் கொடுக்கும் அதே வேதாகமம் தான், பாடுகளும் உண்டென்று கூறுகிறது. ஒருவேளை, அந்தப் பாடுகளின் உச்சக்கட்டம் மரணமாகக் கூட இருக்கலாம். ஆபேலில் இருந்து எடுத்துக் கொண்டால் தேவனுக்காக மரித்தவர்கள் அநேகர் உண்டு. வேதாகம சரித்திரத்தில் ஒரு சிலருடைய பெயரும், பிற சரித்திரத்தில் பலருடைய பெயரும் இடம்பெற்றிருக்கிறது.

தேவ நாமத்திற்காகப் பாடுகள் படும்பொழுது தான் பரலோக பாக்கியம் பெறும் வாய்ப்பு நமக்கு அதிகமாகிறது. அவர்கள் தான் பாக்கியவான்கள் என்று அழைக்கப்படுகின்றனர். மலைப்பிரசங்கத்தில் இயேசுக் கிறிஸ்து இது குறித்து கூறியுள்ளார்.**"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்..."** (மத். 5 : 10)" **என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பபடுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்"** (மத். 5 : 11).

ஆகவே, அருமையானவர்களே, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் வரும் பாடுகளைக் குறித்துக் கலங்காமல், ஆபேலைப் போல தேவ சித்தத்தை நிறை வேற்றுவதில் உறுதியாயிருந்து, ஆபேலைப் போல உயிரையே விட வேண்டியிருந்தாலும் சத்தியத்தில் நிலைத்திருப்போம். இக்காரியத்தில் நாம் ஆபேலின் பிரசங்கத்திற்கு செவிகொடுப்போம்.

## III. பாடுகளுக்கான பலனைப் பற்றி ஆபேலின் பிரசங்கம்

ஆபேலுடைய மூன்றாம் பிரசங்கம், பாடுகளுக்கான பலன் பற்றியது. ஒருவேளை, தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதினால் வரும் பாடுகளைக் கண்டு நாம் பயந்து போய், கிறிஸ்தவ ஜீவியத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிடலாமா என்று சிந்திப்போமானால் ஆபேலின் இப்பிரசங்கம் நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தேவனுக்காக முதன் முதலாகப் பாடுகள் பட்டவன் ஆபேல் என்பதை நாம் கண்டோம். தனக்காக இரத்தம் சிந்திய ஆபேலை தேவன் மறக்கவில்லை. எபிரேய ஆசிரியரைக் கொண்டு கொடுத்த விசுவாசிகளின் பட்டியலில் இவனுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. எத்தனையோ பேர் ஆபேலுக்கு இணையாக பாடுகள் பல பட்டு தேவனுக்காக வாழ்ந்து மரித்திருந்தாலும் **"மரித்தும் பேசுகிறான்"** என்ற சிறப்புப்பட்டமும் இவனுக்குத் தான் கொடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, ஆபேல் வாழ்ந்து, மரித்து சுமார் 4000 ஆண்டுகளுக்கும் மேலாகியும் தேவன் அவன் விசுவாசத்தையும், செயலையும் மறக்காமல் இப்பூமியில் அவனுக்கு என்ன அந்தஸ்து கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்தார். நியாயத் தீர்ப்புக்குப் பிறகு அவனுக்கு இதைவிட மேலான அந்தஸ்து, ஆம், நித்திய ஜீவன் என்ற அந்தஸ்தும் ஜீவ கிரீடமும் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

நம்முடைய தேவன் நீதியுள்ளவர் என்பதை நாம் அறிவோம். அவருடைய பிள்ளைகளை அவர் நிச்சயம் கைவிடமாட்டார். **தன்னுடைய சீஷர்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் கூட ஒருவன் அதற்குண்டான பலனை அடையாமற் போகான் என்று சொல்லும் தேவன், தனக்காக ஒருவன் சரீரப் பாடுகள் பல படும்போது சும்மா விட்டுவிடுவாரா, என்ன?** நிச்சயம் விடமாட்டார். ஒருவேளை பூமியின் பாடுகளை அவர் அனுமதித்தாலும், மறுமையில் வாடாத ஜீவகிரீடத்தைத் தருவார்.

முதல் நூற்றாண்டுக் காலத்தின் பிந்திய காலங்களில் அநேக அல்லல்களுக்கு ஆட்பட்டு சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆவியானவர் சொல்லும் போது, நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே. இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாக பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்து நாள் உபத்திர வப்படுவீர்கள். ஆகிலும் நீ மரண பரியந்தம்

உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" என்று கூறியுள்ளார். (வெளி. 2 : 10)

மேலும், அப்போஸ்தலன் பவுல் கொரிந்து சபையாருக்குச் சொல்லும் போதும், பாடுகளுக்குப் பலன் உண்டு என்றே கூறுகிறார். "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (I கொரி. 15 : 58). இன்னும் பவுல் அப்போஸ்தலன், இளைஞன் தீமோத்தேயுவுக்குச் சொல்லும்போது, "நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது . . ." என்று கூறுகிறார். (II தீமோ. 4 : 7, 8).

போராட்டம் என்பதும் பாடுகள் தானே. ஒருவேளை பாடுகள் நிறைந்த போராட்ட வாழ்க்கையை தேவன், பவுலுடைய வாழ்க்கையில் அனுமதித் திருந்தாலும், ஜீவ கிரீடத்தை வாக்குத்தத்தமாக கொடுத்துள்ளார் என்பதைக் கவனித்தீர்களா? அவருக்காகப் பாடுபடுகிறவர்களை தேவன் வெறுமனே விட்டு விடுவதில்லை.நிச்சியமாக இல்லை

ஆகவே, எனக்கு அருமையானவர்களே, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் நமக்கு நேரிடும் துன்பங்களையும், சோர்வுகளையும் கண்டு நாம் திடனற்றுப் போக வேண்டாம். அது எந்த வகையான பாடுகளாக இருந்தாலும் கலங்க வேண்டாம். கிறிஸ்தவ ஜீவியத்தில் முனைப்பு காட்டுவோம். ஊழியத்தை உற்சாகமாகச் செய்வோம். தைரியமாகச் செய்வோம்.

அன்பரே, மரித்தும் பேசும் ஆபேலுடைய பிரசங்கத்தைக் கொஞ்சம் கேட்டோம். இன்னும் நிறைய உண்டு. இருப்பினும், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை ஜாக்கிரதையாய் நம்முடைய வாழ்வில் கடைபிடிப் போமாக. அப்படிச் செய்வோமானால் ஆபேலுக்கு பரலோக பாக்கியத்தை வாக்குத்தத்தம் செய்துள்ள தேவன் நமக்கும் கொடுப்பார்.

ஆகவே, நம்முடைய கிறிஸ்துவ ஜீவியத்தை நம்பிக்கையோடும், தைரியத்தோடும் நடத்தி இம்மைக்குரிய ஆசீர்வாதத்தையும், மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெறுவோமாக!

**EZS ராஜநாயகம்.**

# சுவிசேஷத்திற்கு கீழ்படிவது எப்படி?

"நீங்கள் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையைத் துவங்குவது எப்படி? என்ற தலைப்பின் கீழாக நாம் பாடங்களை ஒரு தொடராக கற்று வருவது உங்களுக்கு தெரியும்.

இந்தத் தொடர்ச்சியின் அடுத்த கட்டமாக, இப்பொழுது சுவிசேஷத்திற்கு எப்படிக் கீழ்படிவது என்று பார்க்கப் போகிறோம். நற்செய்தி என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அநேக ஜனங்களுக்கு இதன் பொருள் தெரியாது. பொருள் என்னவென்றே தெரியாதபொழுது சுவிசேஷத்திற்கு அவர்கள் எப்படி கீழ்படிய முடியும்? அவர்களால் முடியாது. ஆகவேதான் நாம் சுவிசேஷம் என்றால் என்னவென்றும், அதற்கு கீழ்படிவது எப்படியென்றும் அறிந்துகொள்ள விரும்புகிறோம்.

முதலாவது "சுவிசேஷம்" என்ற வார்த்தையைக் கவனிப்போம். இவ்வார்த்தையை எல்லா நேரங்களிலும் பயன்படுத்துகிறோம். ஆனால் நாம் பயன்படுத்துகிற இவ்வார்த்தையின் பொருள் தெரியாமல், அது என்ன சொல்லுகிறது என்று விளங்காமல் பயன்படுத்துவதால் என்ன நன்மையுண்டு. சுவிசேஷம் என்ற வார்த்தை "நற்செய்தி" என்று விளக்கப்பட்டிருக்கிறது அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார், அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள் சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே (ரோமர் 10 : 15) சுவிசேஷம் ஏன் நற்செய்தியாகிறது? ஏன் எனில் இது இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கொரிந்து பட்டணத்தாருக்கு பவுல் இவ்விதம் கூறுகிறார் அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியபடுத்துகிறேன் நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு அதிலே நிலைத் திருக்கிறீர்கள். நான் உங்களுக்கு பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதை கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.

நான் அடைந்ததும் உங்களுக்கு பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால் கிறிஸ்துவானவர். வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். (1 கொரி 15 : 1–4) ஆனால், இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய இவையெப்படி

நற்செய்தியாக முடியும்? கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, நாம் இரட்சிப்படையும்படியாய், மரித்து தம்முடைய மரணத்தின் மூலம் நித்திய வாழ்வுக்குண்டான நம்பிக்கையை நமக்குக் கொடுத்தபடியால் இது நற்செய்தியாகிறது. ஆனால், அவருடைய மரணம் ஒரு முடிவு அல்ல அவர் மரணத்தை வென்று கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து, தான் தேவனுடைய குமாரனென்றும், மனிதனை பாவத்திலிருந்து இரட்சிக்கமுடியும் என்று நிருபித்தபடியால், நாம் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட முடியும். பவுல், ``நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காகமரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் என்றும் சொல்லியுள்ளார். (ரோமர் 5 : 8) மேலும் பேதுரு ``நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார், அவருடைய தழும்புகளால் குணமானீகள். (1 பேதுரு 2 : 24) கூறியுள்ளார்.

இன்னும் அநேக வசனங்கள் கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை விளக்கமாக பேசி இக்கருத்தை உறுதிசெய்கிறது. ஆனால், அது உன்னையும், என்னையும் எப்படி இரட்சிக்கிறது? சரி, முதலாவது, நாம் அதை விசுவாசிக்க வேண்டும். நாம், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும் அவர் நமது பாவங்களுக்காக, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, கல்லறையிலிருந்து எழுந்தார் என்றும் விசுவாசிக்க வேண்டும். இதை விசுவாசிக்காத பட்சத்தில், நாம் இரட்சிப்படைய முடியாது. கிறிஸ்துவே இக்கருத்தை வலியுறுத்துகிறார்'' ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவரென்று விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்''. (யோவா 8 : 24) இதை ஏற்றுக்கொண்டால்தான் நம் ஜீவன் இழந்து போயுள்ளது என்பதை விசுவாசிக்க முடியும். பிறகு, நாம் விசுவாசிப்பதோடு மாத்திரமல்ல, அந்த நற்செய்திக்குக் கீழ்படிய வேண்டும். வேதவாக்கியங்களை நாம் தொடர்ந்து படித்தால், நற்செய்தியில் கட்டளைகள் உண்டு என்பது நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

முதலாவது, நாம் நற்செய்தியை கேட்கவேண்டும், ஆகவேதான், கிறிஸ்து உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்று சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (ரோமர் 16 : 15) விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வார்த்தையினாலே வரும் என்று பவுல் சொல்லியுள்ளார் (ரோமர் 10 : 17) அதைத்தான் நாம் இப்பொழுது செய்து கொண்டுள்ளோம் நாம் விசுவாசிக்கும்படியாக தேவனுடைய வார்த்தையைப் படிக்கிறோம். இன்னும், அறிந்து கொள்ளும்படியாக நற்செய்தியை கேட்கிறோம். அடுத்து, நாம் நற்செய்தியை விசுவாசிக்க வேண்டும். விசுவாசமுள்ளவனாகி

ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று கிறிஸ்து சொல்லியுள்ளார் (மாற்கு 16 : 16) விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று எபிரேய ஆசிரியர் கூறியுள்ளார் (எபிரேயர் 11 : 6).

பிறகு மனந்திரும்புதல் என்ற கட்டளை வருகிறது. அதன்பொருள் ஒருவன் தன் பாவங்களிலிருந்து விலகவேண்டும் அல்லது மோசமான, தவறான பழக்கங்களிலிருந்து விடுபட வேண்டும். ஒருவன் தன் பாவங்களிலிருந்து இரட்சிப்படைய வேண்டுமானால், தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பும் விருப்ப முள்ளவனாக இருக்கவேண்டும். மனந்திரும்பாவிட்டால் அழிந்து போவீர்கள் என்று கிறிஸ்து கூறியுள்ளார். (லூக்கா 13 : 3) எங்குமுள்ள மனுஷர் யாவரும் மனந்திரும்ப வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளதாக பவுல் அறிவிக்கிறார் (அப் 17 : 30).

மனந்திரும்புதலுக்குப் பிறகு வருவது அறிக்கையிடுதல் அதாவது, ஒருவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். ஒருவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். ஒருவன் கர்த்தரைக் குறித்து வெட்கப்பட்டாலோ அல்லது அறிக்கையிட மறுத்தாலோ அவன் இரட்சிப்படைய முடியாது. நாம் மனிதர் முன்பாக அவரை அறிக்கையிட்டால் பரலோகத்திலிருக்கிற பிதா முன்பாக நம்மை அறிக்கையிடுவேன் என்று கிறிஸ்து கூறியுள்ளார் (மத் 10 : 32) இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணவேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் கூறியுள்ளார். (ரோமர் 10:10) ஞானஸ்நானம் பெறவேண்டுமானால் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடச் சொல்லி எத்தியோப்பிய மந்திரியிடம் பிலிப்பு கேட்டார் (அப்போ 8 : 37).

இறுதியாக, ஒருவன் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் அல்லது தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட வேண்டும் (மாற்கு 16 : 16) பாவங்கள் கழுவப்பட ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும் என்று பிரசங்கித்தார் (அப் 2 : 38) ஞானஸ்நானத்தின் மூலமாக ஒருவன் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டு, சபையில் சேர்க்கப்படுகிறான் என்பதற்கு பல வேத வசனங்கள் சான்றாக உண்டு (ரோமர் 6 : 3 – 4) (1 கொரி 12 : 13) யோவான் 3 : 3 –5 வசனப்பகுதியில் சொல்லப்படும் மறுபிறப்பு இந்த வகையைச் சேர்ந்ததுதான். எல்லாவற்றிற்கும் மேலாக, ஞானஸ்நானமானது இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளின் சாயலாக உள்ளது.

அதாவது கிறிஸ்து சிலுவையில் மரித்ததைப் போலவே, ஒரு பாவி தன்னுடைய பாவங்களுக்காக மரிக்கிறான். கிறிஸ்து அடக்கம் செய்யப்பட்டதைப் போலவே ஒரு பாவியும் தண்ணீருக்குள்ளிருந்து புதிய ஜீவனுக்காய் எழுந்து

வருகிறான் (ரோமர் 6 : 1 – 12) இது மிக நேர்த்தியாக இல்லையா? பவுல் தொடர்ந்து இவ்விதம் விளக்குகிறார் முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்.

பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோமர் 6 : 17 – 18) இங்கே கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளை ஏற்றுக்கொண்டு செய்யும் கீழ்படிதல், மனந்திரும்புதல், தண்ணீருக்குள் அடக்கம் செய்யும் ஞானஸ்நானம் பிறகு உயிர்த் தெழுதலுக் கொப்பான மறுபிறப்பு ஆகிய எல்லாவற்றையும் குறிக்கிறது. இதற்கு முன்பாக, ஒருவன் பாவத்திற்கு அடிமையாயிருந்தான். ஆனால், இவைகளை நிறை வேற்றியதற்குப்பின் அவன் நீதிக்கு அடிமையாயிருக்கிறான். ஆகையால் ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்பொழுது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலில் தனக்கிருக்கும் நம்பிக்கையை வெளிப் படுத்துகிறான். அது நற் செய்திக்குக் கீழ்ப்படிவதன் மூலம் நடைபெறும்.

ஒருவன் நற்செய்திக்குக் கீழ்படிய முடியுமாதலால், தேவனை அறியாத வர்களுக்கும், நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு ஒரு நாளில் கர்த்தர் மீண்டும் வருவார் என்று பவுல் சொல்லியுள்ளார். (11 தெச 1 : 7 –9) பேதுரு இவ்விதம் கூறுகிறார் "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" (1 பேதுரு 4 : 17) இந்த தேவ தாசர்களெல்லாம், நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்கள் மேல் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படி கர்த்தர் வருவார் என்று சொல்லியிருப்பதால், பரலோகம் செல்லும்படியாய் இரட்சிப்படைய ஒருவன் நற்செய்திக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது எவ்வளவு அவசியம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதாய் இருக்கும்போது, கர்த்தருக்குள் கீழ்ப்படிய எந்தவொரு முயற்சியும் செய்யாமலிருந்தால் என்ன நிலைமையாகும்?

மீண்டுமாக ஒருவன் எப்படி நற்செய்திக்குக் கீழ்ப்படிவது? சத்தியத்தை அறிந்து கொள்ள ஒருவன் தேவனுடைய வார்த்தையை படிக்க வேண்டும் அல்லது விசுவாசிக்கும்படியாக வசனம் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்கவேண்டும். பிறகு, தேவனுடைய குமாரனென்றும் இந்த உலகத்திலும், இனிவரும் உலகத்தினின்றும் அவரால் நம்மை இரட்சிக்க முடியுமென்றும் விசுவாசிக்க வேண்டும். அடுத்து அவன் தன்னுடைய பாவங்கள்

எல்லாவற்றிலிமிருந்தும் மனந்திரும்ப வேண்டும். அதன்பொருள், தன்னுடைய மோசமான எல்லா பழக்கங்களையும் விட்டுவிட வேண்டும். தேவ சித்தத்திற்கு விரோதமான காரியங்களை ஒருவன் தொடர்ந்து செய்துகொண்டு பாவத்திற்காய் மனந்திரும்ப முடியாது. மனந்திரும்புதலுக்கும் பிறகு இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று தன்னுடைய இருதயத்திலிருந்து வாயின் மூலம் வரும் வார்த்தைகளால் அறிக்கையிட வேண்டும். கிறிஸ்துவை விசுவாசியாத பட்சத்தில் அவர் தன்னை இரட்சிக்க வேண்டுமென்றும் ஒருவன் எதிர்பார்க்க முடியாது. இறுதியாக, ஒருவன் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும். அல்லது பாவமன்னிப்புக்காக தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட வேண்டும்.

இப்பொழுது ஒருவன் இவைகளைச் செய்துவிட்டால் பிறகு கர்த்தர் இவனை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். எவ்வளவு சுலபமானது?

வேதாகமத்தின் மகத்தான உண்மைகள் பற்றி உங்களோடு பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது மகிழ்ச்சியான ஒன்று. நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இல்லாவிட்டால் நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய இந்தப்பாடம் உதவுமென்று நம்புகிறேன்.

J.C. சோட்

## நன்றி சொல்கிறேன்

*கர்த்தருடைய பெரிதான கிருபையாலும் உங்கள் அநேகருடைய ஜெபத்தாலும் திட்டமிட்டபடி கடந்த மே 4, 5, 6 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்திலுள்ள ஏலகிரிமலையில் வேனிற்கால வேதாகம முகாமும் திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கமும்" சிறப்புற நடந்தேறியது.*

*தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள 22 பம்டணங்களிலிருந்தும், ஆந்திர மாநிலத்திலிருந்தும் மொத்தம் 205 பேர் கலந்து கொண்டனர். 5 ஆண்களும் 4பெண்களும் தங்களை கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படுத்தினர்.*

*முகாமின் வெற்றிக்காக ஜெபித்த உங்கள் அனைவருக்கும் செய்தி கொடுத்த தேவ ஊழியர்களுக்கும் மீண்டும் நன்றி கூறுகிறேன்.*

*ஆசிரியர்*

## பெண்கள் பகுதி

# உண்மையைத் தேடி (பாகம் 2)

புத்தகக் கடையில் இருந்து வாங்கி வந்த அந்த பெட்டியை ஆண்ட்ரூ திறந்தான். தனக்காக வாங்கி வந்த வேதாகமத்தை ஆவலுடன் எடுத்துக் கொண்டார் ரேச்சல். இளமைக் காலங்களில் தன் தாயார் சொல்லிக் கொடுத்த வேதாகமக் கதைகளை நினைத்துப் பார்க்கிறாள். தான் வளர்கின்ற வயதில் ஆவிக்குரிய காரியங்களை அலட்சியம் பண்ணினதை நினைத்து மிகவும் துக்கமடைகிறாள்.

"கடைக்காரர் இதையும் எனக்கு விற்றார்" என்று ஆண்ட்ரூ தன் பையிலிருந்து மற்றுமோர் புத்தகத்தையும் எடுக்கிறான். இதுதான் "ஒத்த வாக்கியம்" என்ற புத்தகம். ஒரே பாடத்தைப் பற்றியதான பல வசனப்பகுதிகளை கண்டுபிடிக்க இப்புத்தகம் பெரிதும் உதவும். இப்பொழுது அன்பு, நம்பிக்கை, சபை போன்ற வார்த்தைகளுக்கு விளக்கம் தரும் வேறு வசனங்களை எடுத்துப்பார்" என்று ஆண்ட்ரூ கூறுகிறான்.

"ஓ, ஆமாம்" என்று ஆச்சரியத்துடன் ஒப்புக் கொண்டாள் ரேச்சல். வேதாகமத்தைப் பற்றி நாம் அதிகமாக அறியாதிருக்கும் இந்நேரத்தில் இந்த புத்தகம் ஒத்த வசனங்களை காட்டுவதற்கு மிகவும் உதவும் என்று கூறுகிறாள். இப்போது முதல் முதலாக எதை எடுத்து முதலில் பார்ப்பது?

நான் நினைக்கிறேன், இரவு உணவுக்குப் பிறகு, நம்முடைய தியான நேரத்தை இரண்டு பகுதிகளாக பிரிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து, நம்மை என்ன செய்யச் சொல்கிறார் என்பது நம்முடைய பிரதான நோக்கமாக இருப்பதால், இருவரும் தனித்தனியே மத்தேயு எழுதின சுவிசேஷத்திலிருந்து ஆரம்பித்து படிப்பது அவசியம். பிறகு ஒத்த வாக்கியத்தின் உதவியோடு புதிய வார்த்தைகளை கண்டுபிடித்து முக்கிய மான அர்த்தங்களை எழுதிப் படிப்பதில் சில நேரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆண்ட்ரூ ஆலோசனை கூறினான். "இது நல்ல திட்டம். நான் உணவு வேளையை முடித்துவிட்டேன். தீமோத்தேயு விழித்துக் கொண்டான். நீங்கள் அவனைப் பிடித்துக் கொள்கிறீர்களா?

உணவு வேளை முடிந்த பின்பு ரேச்சலும், ஆண்ட்ரூவும் தங்களின் பைபிள், ஒத்த வாக்கியப் புத்தகம்,

நோட் புத்தகம், பேனா ஆகிய வைகளுடன் மேசையில் அமர்ந்தனர் அவர்கள் வேதத்தை வாசிக்க ஆரம்பிக்குமுன்பு உண்மையைத் தெரிந்து கொள்ளவும் புரிந்து கொண்டு தங்கள் குழந்தைக்கு எவ்வாறு பயிற்றி அளிப்பது என்பது பற்றியும் தங்களுக்கு உதவும்படி தேவனிடம் மன்றாடினார். ஏதாவது சந்தேகங் களைப் பரிமாறிக் கொள்வ தைத் தவிர மற்ற நேரங்களில் மௌனமாகவும், தனித்தனியாகவும் வாசிக்க வேண்டும் என்று தீர்மானித்தனர்.

`` இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நாம் விசுவாசிக் கிறதினால் சபையைப் பற்றியும், எவ்வாறு இரச்சிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து சாதிக்க வேண்டும்" என்று ரேச்சல் கூறுகிறார்.

``அது மிகவும் நல்லது" என்று ஆண்ட்ரூவும் ஒத்துக் கொள்கிறான்.

சில நிமிடங்களில் ரேச்சல் தான் வாசிப்பதை நிறுத்திவிட்டு மத்தேயு அதிகாரத்தில் யோவான் ஸ்நானகன் பரலோக ராஜ்யம் சமீபமாய் இருக்கிறது என்று கூறுகிறார். பரலோக ராஜ்யம் என்றால் என்ன? என வினவுகிறாள்.

நாம் அந்த கேள்வியை எழுதி வைத்துக் கொண்டு அதற்கு என்ன பதில் என்று கண்டுபிடிப்போம் மத்தேயு 4:17ல் "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவே ராஜ்யத்தைப் பற்றிப் பேசினதினாலே ராஜ்யம் என்பது முக்கியமான ஒன்றாகும் என்பதை ரேச்சல் புரிந்து கொண்டாள். இயேசுகிறிஸ்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்தார் என்று 23ம் வசனத்தில் பார்க்கிறோம். மேலும் மலைப் பிரசங்கம் முழுவதும் பார்த்தால் இயேசு கிறிஸ்து ராஜ்யத்தின் காரியங்களைப் பற்றியே பேசுகிறார். தன்னுடைய பிரசங்கங்களில் இயேசு இராஜ் யத்தைப் பற்றி முக்கியமாக பேசினதினால் நான் அந்த வசனங்களை குறித்துவைத்துக் கொள்வேன்" என்றாள் ரேச்சல்.

"ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்" என்று கூறிய இயேசு தொடர்ந்து மத்தேயு 6 : 33ல் "முதலாவது தேவனுடைய ராஜ்யத் தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைக ளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்றுரைத்தார். இது ஒரு அதிசயமான வாக்குத்தத்தம் என்று ஆண்ட்ரூ கூறுகிறான்.

"நானும் அதைக் குறித்துக் கொள்கிறேன்" என்று மிகவும் ஜாக்கிர தையாக தன் பேனாவினால் கோடிட்டுக் கொள்கிறாள் ரேச்சல். நம்முடைய வாழ்க்கையை ஆவிக்குரிய ரீதியில் நெறிப்படுத்தும் பொழுது இந்த மாதிரியான வழிகாட்டுதல்களை எங்கே கண்டு பிடிக்கமுடியும் என்பதை நம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும்.

சில நிமிட மௌனத்திற்குப் பிறகு மத்தேயு 7 : 13, 14ல் கூறப்படுவதின் பொருள் என்ன? என ஆண்ட்ருவிடம் கேட்கிறாள்.

“இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள், கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்''. இதன் பொருள் என்னவென்றால் இயேசு கிறிஸ்துவின் வழி என்பது சுலபமாகக் கண்டுபிடிக்கக் கூடிய ஒன்று அல்ல, எளிதாக கடைப்பிடிக்க கூடிய ஒன்றும் அல்ல. அப்படியிருப்பதால் அநேக மக்கள் அழிவின் பாதையையே தெரிந்தெடுத்துக் கொள்கின்றனர் போல் தெரிகிறது.

அதற்கு அடுத்த வசனம் கூறுகிறது, “கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்''. இந்த மாதிரி மக்கள் இருக்கிறார்களா? மத உலகில் நம்மை தவறாக வழிநடத்துபவர்கள் உள்ளனரா?

நான் இதை நம்புகிறேன். இது உண்மையாக இல்லாமலிருந்திருந்தால் இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட ஒரு எச்சரிப்பை கொடுத்திருக்கமாட்டார். 21-22, வசனத்தைப் பார்த்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக் காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

இவ்வளவு காரியங்களையும் இயேசுவின் நாமத்தினாலே செய்பவர்கள் எவ்வாறு தவறு செய்தவர்களாவார்கள்? நான் அவர்களை அறியேன் என்றும் சொல்கிறாரே! அது எப்படி? என்று வியப்படைகிறாள் ரேச்சல்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவர்கள் இவைகளைச் செய்திருந்தாலும் அவர்கள் அதை பிதாவின் சித்தத்தின்படி செய்யவில்லை. அதோடு அவர்களை அக்கிரமச் செய்கைக்காரர் என்றும் இயேசு கூறுகிறார். அதாவது, அவர் வேதாகமத்தில் எந்த போதனைகளை

கொடுத்துள்ளாரோ அவைகளை அவர்கள் பின்பற்றவில்லையென்பது பொருள்.

மதகாரியங்களில் எல்லா உபதேசங்களையும், அப்படியே செய்ய வேண்டுமென்பது கட்டாயமல்ல, ஒருவன் தான் உண்மையான வனாகவும், நேர்மையானவனாகவும் இருந்தால் அதுவே போதும் என்று ஜனங்கள் சொல்வதைக் கேள்விப்பட்டி ருக்கிறேன் என்று ரேச்சல் கூறினாள். "அவர்கள் கூறுவது சரியா? எல்லா உபதேசங்களும் முக்கியமா?"

"நன்று, சரி நான் ஒரு உண்மையைச் சொல்லுகிறேன் என்று சொல்லி ஞானமாக இவ்விதம் பதிலளித்தான். ஒரு காரியம் வேதாகமத்தில் இடம் பெறுமளவிற்கு தேவனுடைய பார்வையிலே முக்கியமாக இருக்கும்போது அதே காரியம் முக்கியமில்லை. அதை ஒதுக்கிவிடலாம் என்று மனிதன் எப்படி எண்ணமுடியும்? எது முக்கியம் என்றும், எது முக்கியமில்லை என்றும் தீர்மானிப் பதற்கு மனிதர்களாகிய நாம் யார்?

ஆண்ட்ரூ நீ சொல்வது சரி என்று நான் நினைக்கிறேன். தேவன் நாம் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ, அதைச் செய்வதற்கு நாம் உண்மை யாகவே படிக்கிறோம், அதற்காக முயற்சிக்கிறோம் என்பது எனக்கு அதிக மகிழ்ச்சியை தருகிறது" என்று ரேச்சல் கூறினாள்.

**B.B. Choate**

**R.R.Nayagam.**

## ஆபிரகாமின் விசுவாசம்

**தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்**

**தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான்.**

**(ரோமர் 4:20,21**

# ஒபதியா தீர்க்கனின் புத்தகம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | ஒபதியா |
| பெயரின் பொருள் | : | கர்த்தரின் வேலைக்காரன் |
| காலம் | : | கி.மு. 845 |
| யாருக்கு? | : | யூதாவுக்கு |
| விவாதப் பொருள் | : | ஏதோமின் அழிவும், இஸ்ரவேலின் மீட்பும் |
| சிறப்பு | : | பழைய ஏற்பாட்டின் சிறிய புத்தகம் |
| புறக்குறிப்பு | : | I ஏதோமின் அழிவு முன்னுரைக்கப்படுகிறது. 1-9 வசனம்<br>II எதை விதைத்தார்களோ அதை அறுக்கிறார்கள் 10-16<br>III தேவ ஜனங்களின் விடுதலை 17-21 வசனம் |

## இது தரும் பாடங்கள்

1. நடுநிலைமை குற்றமாக முடியும்.
2. தேவ வல்லமை எதிராக வரும்போது மனிதனின் பாதுகாப்பு முற்றிலும் பயனற்றதாகவே இருக்கும்.
3. நித்திய நீதியே நிலைக்கும்.
4. சகோதர சிநேகமில்லாமையில் தேவன் பிரியப்படுகிறதில்லை.
5. அழிவுக்கு முன்னானது அகந்தை.
6. அடுத்தவனுடைய அழிவில் மகிழ்ச்சி கொள்வது தவறு.
7. இறுதி வெற்றி எப்பொழுதும் தேவனுடையதே.
8. ஒருவன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.
9. தவறில் பங்கு கொண்டாலோ அல்லது தவறுக்குத் துணை நின்றாலோ ஒருவன் தவறு செய்தவனாகிறான்.

# மது அருந்துதல்

இந்தியாவில் உள்ள சில மாநிலங்கள் மது அருந்துவதைத் தடை செய்திருக்கிறது. தங்களுடைய அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் இந்த நல்ல நடவடிக்கையை அநேக ஜனங்கள் பாராட்டியிருக்கிறார்கள். ஆந்திரப் பிரதேசம், ஹரியானா போன்ற மாநிலங்கள் இந்த மோசமான பழக்கத்திற்கு முழுத்தடையை விதித்திருக்கிறது. அரசாங்கத்தின் இச்செயலைக் கண்டு சில மக்கள் சந்தோஷமில்லாமல் இருக்கின்றனர். மது இல்லாமல் தங்கள் வாழ்க்கை சோம்பலானதாக மாறிப்போகுமென்று எண்ணத்துவங்கி சோர்ந்து போயுள்ளனர். சிலர் தங்களுக்கு விருப்பமான மதுபானத்தைப் பெற்றுக்கொள்ள, தங்கள் மாநில எல்லையைக் கடந்து அண்டை மாநிலங்களுக்குச் செல்கிறார்களென்று கூடக் கேள்விப்பட்டேன். வேறொரு புறம், நிறைய குடும்பப் பெண்களும், குழந்தைகளும், தங்களுடைய நல்ல சமாதான வாழ்வு குடிப்பழக்கத்தால் பறிக்கப்பட்டு போகுமாதலால், இந்த நடவடிக்கையால் மகிழ்ந்து போயுள்ளனர். நிறைய கணவன்மார்கள் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து, குடும்பத் தேவைகளை கவனிக்காமல் மனைவி, பிள்ளைகளைப் போட்டு உதைப்பார்கள்.

மது அருந்தும் பழக்கத்தின் சரித்திரம் மிகப் பழமையானது. பழங்காலங்களிலேயே ஜனங்கள் குடித்திருக்கிறார்கள். இந்த குறிப்பிட்ட பழக்கத்தை பழங்கால மோசமானதொரு பழக்கம் என்று நாம் சொல்ல முடியும். உலகெங்குமுள்ள மக்கள் இந்த அசிங்கமான பழக்கத்தை தங்களுக்கு உருவாக்கிக் கொள்கிறார்கள். ஒவ்வொரு நாளும் குடிகாரர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. சிலர் அவ்வப்போது குடிப்பவர்களாகவும், சிலர் மொடாக்குடியர்களாகவும் உள்ளார்கள். எப்படிக் குடித்தாலும், குடிப்பவர்கள் குடிகாரர்களே.

மதம் மற்றும் சமுதாய அமைப்புகளிடமிருந்து இப்பழக்கத்திற்கு எதிரான எச்சரிக்கை மீண்டும் மீண்டும் கொடுக்கப்பட்டு, இதன் மோசமான விளைவுகள் எடுத்துரைக்கப்பட்டாலும் யாரும் கண்டு கொள்வதில்லை. இப்பழக்கத்திற்கு அடிமையாகிப் போன மக்கள் இப்படிப்பட்ட எச்சரிப்புகளுக்கு ஒரு மரியாதையும் தருவதில்லை. குடிப்பழக்கத்தை நாங்கள் விட்டுவிடுவோம் என்று நீங்கள் எப்படி எதிர்பார்க்கிறீர்கள் என்று சில குடிகாரர்கள் கேட்கிறார்கள்? அதுமாத்திரமல்ல

நாங்கள் எல்லாசமானவர்களாக வெற்றிகரமான வாழ்க்கை வாழ்ந்து எல்லோரைப்போல இருக்கவேண்டுமென விரும்புகிறோம் என்று சொல்கின்றனர். தங்கள் மோசமான பழக்கத்திற்கு எப்படி முட்டாள்தனமான வாதத்தை முன்வைத்து சப்பைக்கட்டு கட்ட முயற்சிக்கிறார்கள் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?

இவர்களில் அநேகர் முதலில் கொஞ்சமாகக் குடிக்க ஆரம்பித்து பிறகு மொடாக்குடியர்களாக மாறினவர்கள். ஆரம்பம் கொஞ்சமான அளவுகளில் ஏற்படும் மது மற்றும் புகை ஆகிய மோசமான பழக்கங்களின் விபரீத விளைவுகளை நமது பிள்ளைகளுக்குப் போதித்து எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். முதலில் உங்களுடைய நல்ல முன்மாதிரியைக் காட்டுங்கள். அநேக சமயங்களில் ஓட்டுநர் குடித்திருந்தால் வாகனம் விபத்துக்குள்ளானது என்ற செய்தியை வாசிக்கிறோம் அல்லது கேட்கிறோம். குடித்திருந்த ஒருவன் அடுத்தவனைக் கொலை செய்து விட்டான் என்ற செய்தியை எத்தனை முறை கேட்டிருக்கிறோம். ஆம். இந்த பழக்கத்தினால் அநேக குற்றங்கள் நிகழ்கிறது. ஒரு வாலிபனோ அல்லது வாலிபப்பிள்ளையோ, ஒரு ஆணோ அல்லது பெண்ணோ கொஞ்சம் குடிப்பது பெருங்குடிக்கு வழி வகுத்துவிடும் என்று ஒருபோதும் நினைத்ததில்லை. அன்பான நண்பரே, மதுபானம் தயாரிக்கும் துறை, கவர்ச்சிகரமான விளம்பரங்களைச் செய்து தங்கள் தொழிலை சிறப்பாக நடத்துகின்றனர். அவர்கள் இப்படிக்கூட விளம்பரம் செய்யலாம்: இந்த வகை மதுவைக் குடித்து வெற்றிகரமான ஆணாகவும், பெண்ணாகவும் மாறுங்கள்'' என்று.

குடிப்பழக்கத்தைக் குறித்து தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறதென்று கவனியுங்கள். இதற்கு நீதிமொழிகள் புத்தகம் மிகச் சிறந்த ஒன்று. ஞானி சாலமோன் இவ்விதம் கூறுகிறார். திராட்சரசம் பரியாசஞ் செய்யும். மதுபானம் அமளி பண்ணும். அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல. (நீதி 20 : 1). மதுபானப் பிரியரையும் மாம்சப் பெருந்தீனிக் காரரையும் சேராதே. குடியனும் போஜனப் பிரியனும் தரித்திரராவார்கள். தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும். (நீதி 23 : 20 – 21) தொடர்ந்து ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. (நீதி 23 : 29 – 31) கூறுகிறார்.

லேவியராகமத்தில், கர்த்தர் ஆரோனிடம் இவ்விதம் சொல்லியுள்ளார். கர்த்தர் ஆரோனை நோக்கி, நீயும் உன்னோடே கூட உன் குமாரரும்

சாகாதிருக்க வேண்டுமானால், ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது, திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்க வேண்டாம். (லேவி 10 : 8 – 9) சிலர் வேதாகமம் குடிப் பழக்கத்தைக் கண்டிப்பதில்லையென்று தவறான எண்ணம் கொண்டுள்ளனர். இப்படிச் சொல்பவர்கள் தங்கள் தவறான பழக்கத்தை நியாயப்படுத்த தான் சொல்கிறார்களேயொழிய வேறல்ல.

சிலர் தங்கள் குடிப்பழக்கத்தை நியாயப்படுத்த பவுலை மேற்கோள் காட்டுவர். பவுல், தீமோத்தேயுவை திராட்சை ரசம் எடுத்துக் கொள் என்று சொல்லியுள்ளார். அங்கே பவுல் என்ன சொன்னார் என்றும், ஏன் சொன்னார் என்றும் உங்களுக்குத் தெரியுமா? தீமோத்தேயு திராட்சரசம் பருகினான் என்று வேதாகமத்தில் நாம் வேறு எங்கும் காணமுடியாது. உன் வயிற்றுப் பிரச்சனைக்காக கொஞ்சம் எடுத்துக்கொள் என்று சொன்னது உண்மை. மருந்துகள் இல்லாத அந்நாட்களில் மருத்துவ ரீதியாகதிராட்சை ரசம் எடுத்துக் கொள்வது பற்றித்தான் பவுல் அங்கே பேசுகிறார் என்பதை நாம் காணலாம். ஆனால், இன்று, நவீன மருத்துவ உலகில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். எல்லாப் பிரச்சனைக்கும் மிகச்சிறந்த மருந்துகள் உண்டு. மது அருந்துவது தவறென்று வேதவசனங்கள் கண்டிக்கும் உண்மை பவுல், தீமோத்தேயு போன்றவர்களுக்கு தெரியும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். மது, கிறிஸ்தவ அறத்திற்கு புறம்பானதென்று தீமோத்தேயுவுக்கு நன்றாகவே தெரியும். ஆகவே, தீமோத்தேயு மது அருந்தியிருக்கமாட்டான் என்பது தெளிவாகத் தெரிகிறது. தீமோத்தேயு தன்னுடைய வயிற்றுப் பிரச்சனைக்கு கொஞ்சம் திராட்சைரசம் எடுத்துக் கொள்ளலாம் என்று பவுல் நினைத்திருக்கலாம். பவுல் இங்கு தீமோத்தேயுவினுடைய பலவீனங்களைக் குறித்துப் பேசுகிறார். ஒரு உண்மையான கிறிஸ்தவன் தன்னை ஒருபோதும் மதுப்பழக்கத்தில் ஈடுபடுத்திக் கொள்ளமாட்டான்.

இன்னும் சிலர், தங்களது குடிப்பழக்கத்தை நியாயப்படுத்த, இயேசுக் கிறிஸ்து கானா ஊர் கல்யாணத்தில் திராட்சரசம் உண்டாக்கினதை முன்னுதாரணமாகச் சொல்வர். எனது நண்பனே இயேசு அந்தத் திருமணத்தில் மதுவை உண்டாக்கவில்லை. அந்தத் திருமணம் நடந்த இடம் பலஸ்தீனா என்பதை மறந்துவிடாதீர்கள். அங்கே திராட்சைப் பழங்கள் அதிகம், விருந்துகளில், திராட்சை ரசம் பருகுவது அங்கு சர்வ சாதாரணமான ஒன்று. அது கேரளாவில் பைனாப்பிள் ரசமும், தேங்காய்த் தண்ணீரும் சர்வ சாதாரணமான பானமாக இருப்பது போல். இயேசு உண்டாக்கின திராட்சை ரசம் போதை தரக்கூடியதல்ல. வேதாகமம் திருமணத்திற்கு வந்திருந்த எல்லோரும் குடித்துத் திருப்தியானார்கள் என்று சொல்கிறது. ஒருவேளை அது

போதை தரக்கூடியதாக இருந்திருக்குமானால் என்ன மாதிரியான ஒரு நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கும்? சில சமயங்களில், தேவனுடைய வார்த்தையை ஜனங்கள் சரியாகப் புரிந்துகொள்ளாதது வருத்தமாக உள்ளது. நாம் வசனங்களை சரியாக நிதானிக்க வேண்டும். (II தீமோ 2 : 15).

அன்பான வாசகரே, கண்டிப்பாக மது என்பது தவிர்க்கப்படவேண்டிய ஒன்று. அன்பு நண்பரே, நீங்கள் ஒரு குடிப்பழக்கம் உள்ளவராக இருந்து, அதிலிருந்து விடுபட விரும்பினால், தேவனிடம் வந்து அவருடைய உதவியையும், வழிநடத்துதலையும் கேட்கும்படியாக ஊக்கப்படுத்துகிறேன். அவர் உங்களுக்கு கண்டிப்பாக உதவி செய்வார். மதுவகைகள் உங்களுடைய சரீரத்தையும், எண்ணத்தையும் பாதிப்படையச் செய்கிறதென்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். உங்களுடைய மோசமான பழக்கத்தின் விளைவை உங்களுடைய குடும்பத்தாரும், உங்களுக்குப் பிரியமானவர்களும் சந்திக்கிறார்கள்.

உங்களுடைய சரீரம் தேவனுக்குச் சொந்தமானது, அதை தீட்டுப்படுத்தாதீர். வேதாகமம் இவ்விதம் சொல்கிறது. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (I ஒகிர 6 : 19 –20) நீங்கள் உங்கள் வாழ்வை இயேசுவுக்குக் கொடாமலிருந்தால், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் நீங்கள் இன்றைக்கு இதைச் செய்யலாம். தேவ ஏவுதலின்படியாக, யாக்கோபு சொல்கிறார், “ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் : பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்” (யாக் 4 : 7) இன்றே இரட்சண்ய நாள் (II கொரி 6 : 2) உங்களுடைய பழைய பாவ வாழ்க்கையிலிருந்து நீங்கள் மனந்திரும்பி, இயேசுக்கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று உங்களை இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்க முடியும். இயேசுவுக்கும், தேவனுக்கும் உங்கள் கீழ்ப்படிதலைப் பூர்த்தியாக்கின பின்பு, நீங்கள் தேவனுடைய பிள்ளையாக முடியும்.

உங்கள் நண்பர்கள், உறவுகள், உங்களுக்கும் பிரியமானவர்கள், இன்னும் நீங்கள் அணுகக்கூடிய அளவில் உள்ள எல்லோருக்கும் இந்த உண்மையை எடுத்துச் சொல்லி மதுப் பழக்கத்தை விட்டு வெளியேற ஊக்கப்படுத்துங்கள்.

**Francis David,**
**New Delhi**

# IIதீமோ 2 : 1-3

## "நல்ல போர்ச் சேவகனாய் தீங்கநுபவி"

போர்ச் சேவகன் என்றால், முதலாவது அவன் ராணுவத்தில் சேரவேண்டும். எப்படி? கீழ்படிதலின் மூலம் (சுவிசேஷத்திற்கு இரட்சிப்பின் திட்டத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்).

(or)

அவன் (கிறிஸ்தவன், போர்ச் சேவகன்) தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களை தரித்துக் கொள்ள வேண்டும். (எபேசி 6 : 10)

எப்பொழுதும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் – ஜீவனோடும் மரணத்தோடும் போராடிக் கொண்டேயிருப்பான். (II கொரி 1 : 8)

இந்த யுத்தம் ஒரு நீண்ட யுத்தம், மிகவும் கடினமான யுத்தம். ஒருவன் இதை சகித்துக் கொள்ள அவன் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

அவன் (கிறிஸ்தவன் – போர்ச் சேவகன்) எதையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டும்.

## I ராணுவப் பயிற்சியை முதலாவது அவன் சகிக்க வேண்டும்.

சத்தியத்திற்காக நடத்தும் யுத்த களத்தில் ஒரு நல்ல போர்ச் சேவகனாயிருக்க வேண்டுமானால், அவன் நல்ல பயிற்சியை யுடையவனாயிருக்க வேண்டும்.

பிரயோஜனமான எந்தவொரு முயற்சிக்கும், முன் ஆயத்தம் என்பது மிகமிக தேவையான ஒன்று. ராணுவத்தில் இப்படிப்பட்ட பயிற்சிக்கு அடிப்படை பயிற்சி என்று சொல்லப்படும். இந்த அடிப்படை பயிற்சியின்றி ஒருவன் சிறந்த போர்ச் சேவகனாக இருக்க முடியாது.

(Example : உ.ம்) மோசே மகத்தான ஒரு கட்டத்தை கொடுத்தவர் 40 வருட சேவைக்காக 80 வருடம் ஆயத்தம் பெற்றவர். இஸ்ரவேலருக்கு ஒரு சிறந்த தலைமையாளராயிருந்தவர்.

இயேசுவானவர் – மூன்று வருட ஊழியத்திற்காக 30 வருடங்கள் பயிற்சி ஆயத்தம் பெற்றவர்.

அவர் தம்முடைய அப்போஸ்தலர்களை ஆயத்தப்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தம் – சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார் (யோவான் 14 : 26; யோவான் 16 : 13)

கர்த்தருடைய சேனையில் இருக்கும் வீரன் – ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் அநேக மணித்துளிகளை செலவிடல் வேம்டும்.

## II யுத்தத்தில் அவன் பங்கு கொள்ள வேண்டும்.

யுத்தம் என்று வந்துவிட்டாலே அவன் (கிறிஸ்தவன்) யுத்தம் கண்டிப்பாக செய்ய வேண்டும். சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் காலா காலமாக நடக்கும் இந்த யுத்தத்தின் அனலில் நாம் நடுநிலையாளராக இருக்கவே கூடாது. (Ref நியா 7 :3; எரேமியா 48 : 10). கர்த்தருடைய சேனை வீரன் "நல்ல போராட்டத்தை போராட வேண்டும். அதற்காகவே அழைக்கப்பட்டவன் I தீமோ 6 : 12).

பாவத்தோடும், தவறான உபதேசத்தோடும் நாம் யுத்தம் செய்கிறோம். இந்த யுத்தமே "அர்மெகதோன் யுத்தம்" ஒருவேளை இதில் நண்பர்களை இழந்து போகலாம். சொந்த ஜனங்களே நமக்கு விரோதமாக திரும்பக்கூடும். இந்த யுத்தத்தில் நீ தூக்கத்தை இழந்து போவாய். நன்றாக சாப்பிடமுடியாது ஏன்? யுத்தத்தின் கடுமை – யுத்தத்தின் கொடுமை நன்மைக்காக பாடுகள் பட்டே தீர வேண்டும்.

## III துன்புறுத்தலை சகித்துக் கொள்ள வேண்டும்.

இயேசு, தேவனிடத்திலிருந்து வந்த பெரிய போதகர். (யோவான் 3 : 1–2)

அவர் மனிதனைப் போலபோதிக்கவில்லை. பேசவில்லை. (யோவான் 7:46)

அவர் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியே போதித்தார். (மத் 4 : 17; மாற்கு 1 : 14, 15)

வியாதியஸ்தரை சொஸ்தமாக்கினார், பிசாசை துரத்தினார், கொந்தளிக்கும் கடலை அமைதிப்படுத்தினார். மரித்தோரை உயிர்ப்பித்தார். இயேசு மனிதனாக, எங்கும் நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார் (அப் 10 : 38) இருந்தும் கூட உலகம் அவரை வெறுத்தது. (யோவான் 16 : 18) மதவாதிகளும் மதத்தலைவர்களும் பொறாமையினாலும் விரோதத்தினாலும், அவருக்கு விரோதமாக எழும்பினார்கள். அவரை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தார்கள்.

அப்போஸ்தலர்கள் பெரிதான கட்டளையை பெற்றவர்கள் அதற்கு உண்மையானவர்கள் 25 ஆண்டுகள் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்து முடித்தார்கள். (கொலோ 1 : 23).

இருந்தாலும் கூட பயங்கரமான எதிர்ப்புகளையும், துன்புறுத்தல்களையும் இவர்கள் சந்திக்க வேண்டியதிருந்தது. சிலர் வெட்டப்பட்டு மரித்தார்கள், சிலர் கொடுமையாக அடிக்கப்பட்டார்கள் பட்டணங்கள் தோறும்

துரத்தியடிக்கப்பட்டார்கள் அவர்களில் ஒருவர் "பத்மு" என்ற தீவிற்கு நாடு கடத்தப்பட்டார். (அப் 12 : 2).

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாள் முதற்கொண்டு அவருடைய அப்போஸ்தலர்கள் மிகவும் கொடுமைபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கிறிஸ்தவ போர்வீரனே? உன்னுடைய வாழ்க்கை ஒரு வசதியான வாழ்க்கையல்ல. பவுல் அடிகளார் சொல்லும் வார்த்தை (2 தீமோ 3 : 12)

யுத்தத்தில் நீ வெற்றி பெற வேண்டுமானால் உனக்கு வரும் துன்பத்தை கண்டிப்பாய் உனக்கு வரும் கொடுமையை நீ சகித்துத்தான் தீர வேண்டும்.

## சோர்வுகளை சகித்துக் கொள்.

சிம்சோனுக்கு சோர்வு வந்தது – நியா 15 : 15, 16,

எலியாவுக்கு சோர்வு வந்தது I ராஜ 19 : 5

இயேசுவுக்கும் சோர்வு வந்தது கெத்செமெனே தோட்டம்

## ஏன்? சோர்வு வருகிறது?

அநேக விசுவாசிகளுக்கு தங்கள் ஆத்தும் இரட்சிப்பைக் குறித்து ஆர்வமும் அக்கறையுமில்லை. லவோதிக்கேயா சபையில் காணப்பட்டது. (வெளி 3:14–20)

இந்த ஆர்வமின்மையினால் அநேகர் நித்தியமாக காணப்படாமல் போகிறார்கள்.

சபையில் காணப்படும் சில பிரச்சனைகள், கள்ள போதனைகளின் கலப்படங்கள், சோர்ந்து போகச் செய்கிறது.

அநேக சபைகள் ஆஸ்பத்திரிகளாக மாறிப் போகின்ற அவலம். 'நர்ஸ்' களைப் போல் விசுவாசிகளை கவனித்துக் கொண்டேயிருக்க வேண்டிய நிர்பந்தம்.

விசுவாச கப்பலை அநேக சபை உறுப்பினர்களே சேதப்படுத்தவிடுகிறார்கள். (I தீமோ 1 : 19)

சிலுவையின் சேனை வீரர்களுக்கு இப்படிப்பட்ட சோர்வுகள் இருந்தாலும் இயேசுவையே நோக்கிப் பார்.

**இயேசுவின் மூலமாக கிடைக்கும் மகிமைக்காக எல்லாவற்றையும் சகித்துக் கொள் அப்படி சகித்துக் கொள்பவனே முடிவு பரியந்தம் நிலை நிற்பவன். அவனே இரட்சிக்கப்படுவான். (I கொரி 15 : 18) (மத் 24 : 13) ஆமென்.**

**வே. தானியேல் துரைராஜ், திருச்சி**

# பேதுரு அப்போஸ்தலன்

அநேக பிரிவினை சபை கிறிஸ்தவர்கள் பேதுருவைப் பற்றி தவறான அபிப்ராயம் கொண்டிருக்கிறார்கள். பேதுரு கிறிஸ்துவோடு இருந்தவன். அப்படி இருந்தும் கிறிஸ்துவை மூன்றுதரம் ஏன் மறுதலித்தான். கிறிஸ்துவை நன்றாய், அறிந்திருந்தும் நான் அவரை அறியேன் என்று சொன்னவன் முன்னின்று ஏற்படுத்திய சபை முக்கியம் அல்ல. அதைவிட வேறு எந்த சபையிலும் இருந்து, தேவனை ஸ்தோத்தரிக்கலாம் என்பது அவர்களின் வாதம்.

இது தவறான கருத்து, மனிதன் மண்ணானவன், பெலவீனமானவன். தவறு செய்யும் வாய்ப்புள்ளவன். அப்படித் தவறும்பொழுது, தான் செய்தது தவறு என்று அறிந்து மனஸ்தாபப்பட்டு கிறிஸ்துவினிடத்தில் மன்னிப்பைப் பெறலாம். அத்துடன் அவன் தன் சுய பலத்தை நம்பினான் அது தவறு என்று அறிந்து மனம் கசந்து அழுதான்.

கிறிஸ்து பேதுருவையும் அந்திரேயாவையும் என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளைவிட்டு அவருக்கு பின் சென்றார்கள். ஏன்! எதற்கு என்று கேட்கவில்லை கிறிஸ்து தன் சீஷர்களை நோக்கி நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். உடனே பேதுரு நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.

கிறிஸ்து பிரதியுத்தரமாக, சீமோனே நீ பாக்கியவான் மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற என் பிதா உனக்கு வெளிப்படுத்தினார் என்றார். பேதுருவுக்கு கிறிஸ்து தன்னை யார் என்று மறுரூப மலையில் வெளிப்படுத்தினார்.

கிறிஸ்து தண்ணீரின் மேல் நடந்து வருகிறதை அறிந்து நானும் உம்மிடத்தில் நடந்து வருகிறேன் என்றான். அவர் வா என்றார். உடனே கடலில் இறங்கினான். சிறிது தூரம் நடந்ததும் நான் அமிழ்ந்து போகிறேன் என்றான். கிறிஸ்து தன் கையை நீட்டி அவனை கடலிலிருந்து எடுத்தார்.

கிறிஸ்துவின் மேல் தன் பார்வையை வைத்திருக்கும்வரை ஜலத்தின்மேல் நடந்தான். தன் பார்வையை சமுத்திரத்தின் மேல் விட்டான் அமிழ்ந்து போனான். இதிலிருந்து நாம் அறிவது நாம் கிறிஸ்துவின் மேலுள்ள பார்வையை, நம்பிக்கையை விட்டு அகலக் கூடாது. அகன்றால் சாத்தான் நம்மை விழுங்கிவிடுவான். பேதுரு கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறவன். வா என்றதும் தன் வலைகளை விட்டுவிட்டு வந்தான். வா என்றதும் உடனே தண்ணீரின் மேல்

நடந்து அவரிடம் சென்றான். வலையைப் போடு என்றதும் வலையை சமுத்திரத்தில் போட்டு ஏராளமான மீன்களைப் பிடித்தான். இவன் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தவன். அப்படியிருந்தும் அவன் கிறிஸ்துவை மறுதலித்தான். ஏன்? ரோமருக்குப் பயந்து, அவர்கள் பிடியிலிருந்து தப்ப அவ்வாறு சொன்னான்.

மனுஷ பெலவீனம் அவனை மேற்கொண்டது. அதுபோல் நமக்கும் பெலவீனங்கள் ஏற்படும். அப்பொழுது மனம் திரும்பி கிறிஸ்துவினிடத்தில் மன்னிப்பைப் பெறவேண்டும். யூதாஸ் தான் செய்தது, தவறு என்று அறிந்து தூக்குப்போட்டுக் கொண்டு செத்தான். அவன் கிறிஸ்துவினிடத்தில் மன்னிப்பைப் பெறவில்லை.

கிறிஸ்து உயிர்த்தெழுந்து மூன்றுதரம் சீடர்களுக்கு தரிசனமானார். மூன்றாவது தடவை பேதுருவை நோக்கி, நீ இவர்களிலும் அதிகமாய் என்னை நேசிக்கிறாயா? என்றார். அதற்கு அவன் ஆம் ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். கிறிஸ்து அவனை நோக்கி என் ஆடுகளை மேய்ப்பாயாக : சபையைக் கண்காணிக்கும் பொறுப்பை அவனிடத்தில் கொடுத்தார். அதை மறுப்பதற்கு நாம் யார்?

ஞானம் - மலேசியா.

## தரியு. யூத மக்களுக்கு கொடுத்த கட்டளை

1. எருசலேம் தேவாலயத்தை யூதரின் மூப்பர்கள் மட்டுமே கட்ட வேண்டும்.
2. எந்த மனிதனும் தடை செய்யக் கூடாது, அந்த தேவாலயத்தைக் கட்டுவதற்கு பொன், வெள்ளி, பொருள்களும் பலி செலுத்துவதற்கு தலையீற்று ஆட்டுக்குட்டிகள், இளங்காளைகள் கொடுக்கப்பட வேண்டும்.
3. இந்த தேவாலயத்தை கட்ட தடை செய்பவன் கொல்லப் பட வேண்டும் அவனுடைய வீடு குப்பை மேடாக்கப்படும்.

எஸ்ரா 6 :1 –12

# ஆவியின் கனி

## விசுவாசம்

விசுவாசம் ஒருவனுடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் முதுகெலும்பு. விசுவாசம் ஒரு மனுஷனுடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பமும் முடிவுமாயிருக்கிறது. விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இவ்வளவு முக்கியம் வாய்ந்த விசுவாசம் கிறிஸ்தவ மார்க்கத்தாரிடையே சொல்லளவில் மட்டுமே காணப்படுவது வியப்பாக இருக்கிறது. இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும், இரட்சகர் என்றும் விசுவாசிக்கிறவர்கள் அவருடைய உபதேசங்களை விசுவாசிக்க மறுக்கின்றார்கள்! கிறிஸ்தவ மார்க்கத்தாரில் பெரும்பாலானவர்கள் வேஷமாய் வாழ்கிறார்கள், விருதாவாய் நாட்களை கழித்துக் கொண்டுள்ளனர். இந்நிலையை காணும்போது இயேசுவின் வார்த்தை நினைவிற்கு வருகிறது "மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ" லூக் 18 : 8 நாம் மெய்யான விசுவாச முள்ளவர்களாய் தேவனுக்குப் பிரியமாயிருக்க விசுவாசத்தைக் குறித்த வேத வசனங்களை பார்ப்போமா?

**வினா 1 : விசுவாசம் என்பது என்ன?**

**விடை : எபிரேயர் 11 : 1**

விளக்கம் : பிள்ளைகளே இல்லாத நூறு வயதான ஆபிரகாமுக்கும தொண்ணூறு வயதான சாராளுக்கும் அவர்கள் பிள்ளை பெறும் நம்பிக்கையை இழந்த நிலையில் தேவன் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையை தந்தார். அந்த குழந்தையை அவர்கள் எப்படி வளர்த்திருப்பார்கள் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள். அந்த பிள்ளை தன் தோளின் மீது விறகை சுமந்து செல்லும் அளவிற்கு வளர்ந்தபிறகு ஒரு நாள் தேவன் ஆபிரகாமை நோக்கி "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்து கொண்டு மோரியா தேசத்துக்குப் போய் அங்கே நான் உனக்கு குறிக்கும் மலைகளில் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியிடு என்றார்" நம்முடைய வாழ்க்கையில் இவ்வாறு நிகழ்ந்தால் நம்முடைய நிலை எப்படியிருக்கும்? ஆனால் ஆபிரகாம் ஈசாக்கை பலியாக ஒப்புக் கொடுத்தான் என்று எபிரேய எழுத்தாளன் எழுதுகிறான். விசுவாசமே ஆபிரகாமின் இந்த துணிச்சலான செயலுக்கு அடிப்படையாய் இருந்துள்ளது. "ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று தேவன் அவனுக்கு உரைத்திருந்த அவருடைய வார்த்தையின் மீது அவனுக்கு இருந்த **உறுதியான நம்பிக்கையினால்** ஈசாக்கை பலியிட்டாலும் அவனை மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறார் என்றெண்ணி ஈசாக்கை பலியாக ஒப்புகொடுத்தான். அவனை திரும்ப பெற்றுக்கொண்டான்.

விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான். அதினாலே அவன் உலகம் ஆக்கினைக் குள்ளானதென்று தீர்த்து விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்கு சுதந்தரவாளியானான் எபி. 11 : 7 இவர்களை போன்று நாமும் நம்புகின்ற தேவனுடைய வார்த்தைகளை உறுதியாயும், நாம் காணாத தேவ செயல்களில் நிச்சயமுள்ளவர்களாய் இருப்பதே விசுவாசம்.

வினா : 2 விசுவாசம் எப்படி வரும்?

விடை : ரோ 10 : 17

"விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்"

விளக்கம் : இந்நாட்களில் கிறிஸ்தவ மார்கத்தாரிடையே சொல்லப்படும் கட்டு கதைகளுக்கு அளவே இல்லை. அவர்களுடைய கட்டு கதைகளை நீங்களும் நம்பவேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு. ஒரு மனுஷனுடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் அவன் கேள்விப்படுவதையெல்லாம் நம்புவது விசுவாசமல்ல தேவனுடைய சித்தத்திற்கு உரியவைகளை அவருடைய வசனத்தினாலே கேள்விப்பட்டு நம்புவதே விசுவாசம். இந்நாட்களில் தேவனுடைய துப்புரவான. உபதேசத்தை கேள்விப்படுவது அரிதாயிருக்கிறது. எனவே நீங்கள் விசுவாசிக்கும்படி கேள்விப்படுகிற கிறிஸ்தவ ஜீவியத்திற்குரிய காரியங்களை தேவனுடைய வசனம் அங்கீகரிக்கின்றதா என்பதை தீர்மானித்து விசுவாசியுங்கள். இல்லையெனில் உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும். அது மட்டுமல்ல அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்" சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கதக்க தாகக் கொடிய வஞ்சகத்தைக் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" II தெச 2 : 11

**வினா : 3 பயனுள்ள விசுவாசம் எது?**

**விடை:** யாக்கோபு 2:14 "என் சகோதரரே ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகள் இல்லாதவனானால் அவனுக்கு பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?

விளக்கம் : நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது கிரியைகளினாலே அல்லவா நீதிமானாக்கப்பட்டான். விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே முயற்சி செய்து கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே"

யாக் 2 : 21 – 22. ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்றும் தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளபடியால் ஈசாக்கை பலியிட்டாலும் மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறார் என்ற அவனுடைய விசுவாசம் மட்டுமே நீதியாக எண்ணப்படவில்லை கிரியைகளுடன் கூடிய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. இதனால் அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தையை கிறிஸ்தவ மார்க்கத்தில் உள்ள அனைவரும் விசுவாசிக்கின்றார்கள், நல்லது. ஆனால், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான்" (மாற் 16:16) என்று இயேசு கூறியுள்ளார். இந்த வசனத்தை விசுவாசிப்பவர்கள் ஞானஸ்நானம் பெற மறுக்கின்றார்கள்! இயேசு : என் சபையை கட்டுவேன் என்றார். மத் 16:18 இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். அப் 2:47 தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை அப் 20 : 28 என்ற வேத வசனங்கள் விசுவாசிப்பவர்கள் கிறிஸ்துவின் சபையில் அவருடன் சேர்ந்து கொள்ள மறுக்கின்றார்கள்!!

நாம் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவில்லை என்றால் நம்முடைய விசுவாசம் பயனற்றதாக இருக்கும் யாக்கோபு கூறுகிறார் : "வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? யாக் 2 : 20 அவர் மேலும் கூறுகிறதாவது : தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படி செய்கிறது நல்லது தான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன யாக் 2 : 19. கிரியை (கீழ்படிதல்) இல்லாத உங்கள் விசுவாசம் பிசாசின் விசுவாசத்தை காட்டிலும் குறையாயிருப்பதால் கிறிஸ்தவ ஜீவியத்தில் நீங்கள் கொண்டுள்ள விசுவாசம் பயனில்லாத விசுவாசம். ஆவியின் கனியான விசுவாசம் தேவனை பிரியப்படுத்தக்கூடிய உன்னதமான செயல். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். எபி. 11 : 6. கிரியையில்லாத செத்த விசுவாசத்தினால் தேவனை பிரியப்படுத்தலாம் என்று எண்ணி உங்களை நீங்களே ஏமாற்றி கொள்ள வேண்டாம் "நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" யாக் 1 : 22.

"தேவன் உங்கள் விசுவாசத்தை வர்த்திக்க பண்ணுவார்"

ஹென்றிமோகன்

# யெரொபெயாம்

யெரொபெயாம் நேபாத்தின் குமாரன், சாலமோன் ராஜாவாக இருந்த காலத்தில், அவனுக்கு ஊழியம் செய்தவன் சாலமோன் கடைசி நாட்களில் செய்த தவறான அரசாட்சியை இவன் தனக்கு சாதகமாக பயன்படுத்தி கலகத்தை தூண்டினான். இது இராஜாவுக்குத் தெரிய வர எகிப்பதுக்கு ஓடிப் போகிறான். சாலமோனின் மரணம் வரை அங்கிருந்துவிட்டு, மரணத்திற்குப் பின் நாடு திரும்பி, சாமர்த்தியமாக ஜனங்களைத் தன்வசப்படுத்தி, ஒன்றுபட்டிருந்த இராஜ்யத்தின் பெரும்பகுதியாகிய இஸ்ரவேலுக்கு ராஜாவாகிறான். இவனைக் குறித்து வேதாகமம் "...இஸ்ரவேலைப் பாவம் செய்யப் பண்ணினவன்" என்று சொல்கிறது. (1 ராஜா 22:51) இந்த வாசகம் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. "....யெரோபெயாம் இஸ்ரவேலைக் கர்த்தரை விட்டுப்பின் வாங்கவும், பெரிய பாவத்தைச் செய்யவும் பண்ணினான்" என்றும் சொல்கிறது. (2 இராஜா 17:21)

இவனுடைய வாழ்க்கையிலிருந்து கர்த்தருடைய பிள்ளைகளும், அவருக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கும் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள் உண்டு.

சாலமோன் ராஜாவின் மரணத்திற்குப் பின் அவருடைய குமாரனாகிய 'ரெகொபெயாம்' அந்த ஸ்தானத்தில் மன்னராக்கப்பட்டான். ஆனால் பத்து கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் கலகம் செய்து, 'யெரொபெயாமை' தங்களுக்கு இராஜாவாக்கினார்கள். யூதா கோத்திரம், பென்யமீன் கோத்திரம் மற்றும் ஆசாரியக் கோத்திரமான லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தாவீதின் குடும்பத்திற்கு ஆதரவாய் நின்றார்கள். இராஜ்யபாரத்தை இளம் வயதில் ஏற்றுக்கொண்ட யெரொபெயாம் 'தேவனுடைய தெய்வீக மாதிரியின்படி ஆராதனை செய்யு தொடர்ந்து எருசலேமுக்குச் செல்ல ஜனங்களை அனுமதித்தால், அவர்கள் யூதாவின் இராஜாவாகிய "ரெகொபெயாமால்" கவர்ந்து கொள்ளப்படுவார்களோ என்று பயந்தான்.

ஆகவே, அவன் தானே ஒரு மார்க்கத்தை உண்டு பண்ணி, தான் தெரிந்து கொண்ட ஆசாரியர்களை கொண்டு நிர்வகித்து வந்தான். இரண்டு பொன் கன்றுக் குட்டிகளைச் செய்து வழிபாட்டு ஸ்தலத்தில் ஆராதனைக்காக வைத்தான். அவைகளின் ஒன்றை வடக்கிலுள்ள 'தாணிலும்' மற்றொன்றை தெற்கிலுள்ள பெத்தேலிலும் வைத்தான். 'கன்று' உருவச் சிலைகளை நிறுவின இரண்டு இடங்களிலும் கோயில்கள் இரண்டைக் கட்டினான். யூதாவில்

ஆசரிக்கப்படும், கூடாரப் பண்டிகைக்கு ஒப்பாய், 8ம் மாதம் 15ம் தேதி ஒரு பண்டிகையை உண்டு பண்ணினான். (1 ராஜா 12:32) ஆசாரியராய் இருக்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட லேவி கோத்திரத்தைச் சேராத, ஜனங்களில் ஈனமானவர்களைத் தெரிந்து கொண்டு, அவர்களை அக்கோயில்களுக்கு ஆசாரியுராக்கினான். (1 இராஜா 12:31) "தன்மனதிலே தானே நியமித்துக் கொண்ட எட்டாம் மாதம் 15ம் தேதியிலே, பெத்தேலில் தான் உண்டாக்கின பலிபீடத்தின் மேல் பலியிட்டு இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையை ஏற்படுத்தி, பலிபீடத்தின் மேல் பலியிட்டுத் தூபங்காட்டினான். (1 இராஜா 12:33 அவனுடைய ஆராதனைகள் முறைகள் அனைத்தும் அவன் தன்னுடைய மனதில், விருப்பம் போல் நியமித்துக் கொண்டவைகள். அவைகள், தேவன் கொடுத்த உண்மையான ஆராதனையைப் போல் தோற்றமளிக்கும் "போலியான ஆராதனை முறைகள்".

யெரோபெயாம் தன்னுடைய ஜனங்களைப் பார்த்து, ".....நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம்; இஸ்ரவேலரே இதோ இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொன்னான்" (1இஜா 12:28) அவன் ஜனங்களுக்கு சொல்ல விரும்பியது இதுதான். பழைய ஆராதனை முறையை, புதிய வடிவத்திலே நான் உங்களுக்குத் தருகிறேன். நீங்கள் அதை தாராளமாய்ப் பின்பற்றுங்கள். அதில் தவறேதுமில்லை என்பது தான். அதாவது இந்தப் பொன் கன்றுக்குட்டிகள் தான் தேவர்கள். இந்தத் தேவர்கள் உங்கள் வீடுகளில் அருகாமையில் உள்ளது. இந்த தெய்வங்களை நீங்கள் நெருங்குவது சுலபம். ஆகவே நீங்கள் எருசலேமுக்குப் போகாமல் இங்கிருந்தே ஆராதிக்கலாம் என்றான். ஆனால் பிதாவாகிய தேவன் அது"பாவம்" என்று சொல்கிறார். அது மாத்திரமல்ல, இவனைக் குறித்து வேதாகமம், இஸ்ரவேலைப் பாவம் செய்யப் ்பண்ணினவன் என்று சொல்கிறது.

**இவன் செய்தவைகளைப் பாருங்கள்**

1. யெரோபெயாம் தேவன் தெரிந்து கொள்ளாத இடங்களை ஆராதனைக்காகத் தெரிந்து கொண்டான் (1 இராஜா 11:36) தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இடம் எருசலேம் தான் (உபா 12:11.14) அங்கு தான் தேவாலயம் இருந்தது. பலிபீடம் இருந்தது. ஆசாரியர்கள் இருந்தார்கள். இஸ்ரவேலர் அனைவரும் அங்கு பலி செலுத்தி பண்டிகைகளை அங்கு கொண்டாட வேண்டியவர்களாயிருந்தார்கள். ஆனால் யெரொபெயம் ஜனங்களை எருசலேமுக்குப் போகவிடாமல் செய்தான்.

2. யெரொபெயாம் ஆராதனைக்குண்டானவைகளைத் தான் தெரிந்து கொண்டான் விக்கிரகங்களை உண்டு பண்ணினதால், பத்துக் கட்டளைகளில் இரண்டாம் கட்டளையை மீறினான். (யாத் 20:4) இவன் உண்டு பண்ணின பொன்

கன்றுக்குட்டிகளை தேவன், பாராமுகமாய் இருப்பார் என நினைத்திருப்பானா?

3. யெரொபெயாம், ஆராதனைக்குண்டான நேரங்களை தானே தெரிந்து கொண்டான் எருசலேமின் பண்டிகைகளுக்கொப்பான பண்டிகைகளைத் தெரிந்து கொண்டான். இவைகளெல்லாம், ஜனங்களில் சௌகரியத்திற்காகத்தான் என்றும் சொன்னான். தேவனுடைய சித்தத்திற்கு ஏன் கீழ்ப்படியக் கூடாது என்பதற்கு காரணங்களைச் சொல்லாத சமயவாதி யாராது உண்டா?

4. யெரொபெயாம் தனக்கென ஒரு ஆராதனை முறையைத் தெரிந்து கொண்டான். லேவி கோத்திர ஆ சாரிய முறைக்கும் பதிலாக புதிய ஆசாரிய முறையை துவக்கினான். எப்பொதுமே, ஒரு தவறு, பல தவறுகளுக்கு வழி வகுக்கும். லேவியின் மக்களை ஆசாரிய ஊழியம் செய்யும்படி தேவன் நியமித்திருந்தார். (எண் 3:10) ஆனால், யெரொபெயாம் ஜனங்களின் ஈனமானவர்களை ஆசாரியர்களாக்கினான்.

தேவனின், உண்மையான மார்க்கம், மனிதனால் கொண்டு வரப்பட்ட சடங்குகளை அடிப்படையாக வைத்து மாற்றப்பட்டது. தன்னால் கொண்டு வரப்பட்ட பொய்யான மார்கத்திற்கு ஜனங்கள் யெரொபெயாமால் கவரப்பட்டார்கள். இது தேசத்தில் பிளவை உண்டு பண்ணியது. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமை எப்பொழுதும் பிரிவினையை உண்டு பண்ணியது. பத்து கோத்திரத்தார் யெராபெயாமுடன் போனார்கள்.

யெரொபெயாமின், 22 வருட அரசாட்சிக்குப் பின் வந்த இராஜாக்கள் அவனுடைய கொள்கைஸ்யப் பின்பற்றினார்கள். அசீரியர், இஸ்ரவேலை மேற்கொள்ளும் வரை விக்கிரகாராதனை என்ற தேவ விரோதபாவம், எல்லா ஜனங்களிடமும் பேதமின்றி பரவி இருந்தது.

முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. (ரோம 15:4) இன்றைக்கு, தேவனை அவருடைய வார்த்தையின் படியாகத்தான் ஆராதிக்க வேண்டும். மத் 15:9, யோவா 4:29 2யோவா 9.11) ஜனங்களை தவறாக வழி நடத்தும் ஊழியர்கள், நியாயத் தீர்ப்பின் நாளில் மிகவும் வருத்தப்பட வேண்டியிருக்கும் (மத் 15:14, 18:6, யாக் 3:1)

ஆகையால், யெரொபெயாமின் பாவம் நிறைந்த வாழ்க்கையிலிருந்து ஒரு முக்கிமான பாடத்தை நாம் கற்றுக் கொள்வது அவசியம். "வேதவாக்கியங்களில் எழுதியுள்ளபடி தேவன் ஆராதிக்கப்படவேண்டும். நிச்சயமாக நம்முடைய சௌகரிகயத்திற்கு கூட்டவோ, குறைக்கவோ கூடாது

**EZSR**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/WO/ PP/5
Posted at Erode HPO on 20, May 98
May 98 THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27, காங்கயம்-638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor S. Rajanayagam

PRINTED MATTER BOOK-POST

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27
KANGAYAM - 638 701.
Ph : 04257 - 20030